# நீ பயப்படாதே ...

**நீ பயப்படாதே; நான் உன்னுடனே இருக்கிறேன். திகையாதே நான் உன் தேவன். ஏசாயா 41 : 10**

அருமையானவர்களே,

நம்முடைய தேவன் நம்மோடு இருக்கும்போது பயம் ஏன் ? கடல் கொந்தளிக்கட்டும், புயல் வீசட்டும், நெருப்பு சுடர் விட்டு எரியட்டும், பரவாயில்லை. காற்றையும் கடலையும் நெருப்பையும் உண்டாக்கினவர் நம் ஆண்டவர் அல்லவா ? அவர் சொல்ல ஆகும்; அவர் கட்டளையிட நிற்கும். பின்பு பயம் ஏன் ?

பல நேரங்களில் உன் வாழ்க்கையில் தனிமையை உணருகிறாய் அல்லவா ? எனக்கு யார் இருக்கிறார்கள் என்று உன் மனம் சொல்லவில்லையா ? உலகமே வெறுமையாகத் தோன்றவில்லையா ? நம்பினவர்கள் எல்லாம் கைவிட்டது போல் தோன்றவில்லையா ? வாழ்ந்து என்ன பயன் என்று சிந்திக்க வில்லையா ? இனிமேல், என் எதிர்காலம் எப்படியிருக்குமோ என்று திகைக்கவில்லையா ? உன்னை ஆறுதல் படுத்துவதற்காகவே கர்த்தர் இந்த வசனங்களை எழுதுகிறார்.

**நீ பயப்படாதே நான் உன்னுடனே இருக்கிறேன்.**
**திகையாதே நான் உன் தேவன்** ........... என்பதாக.

வானங்களையும், பூமியையும் உண்டாக்கினவர் உன்னோடு இருக்கிறார். பின்பு ஏன் திகைக்கிறாய். அவர் உன் தேவன் அல்லவா அவர் நீ கூப்பிடும் பொழுதெல்லாம் செவி கொடுக்க ஆயத்தமாயிருக்கிறாரே. பின்பு நீ ஏன் அவரை கூப்பிட மறுக்கிறாய். சந்தேகிக்கிறாய். அநேக நேரங்களில் நீ கூப்பிடும் பொழுது பதில் கொடுக்கவில்லையே என திகைக்கிறாயோ ?

திகைக்கவேண்டாம். அவர் உன்னோடே இருக்கிறார். உன் காரியங்கள் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு இருக்கிறார். உன்னுடைய ஜெபத்தை கேட்டுக் கொண்டே இருக்கிறார். நீ சோர்ந்து போகிறதான வேளையிலே அவருடைய கரம் உன்னை அரவணைப்பதைக் காண்பாய். "**நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்.**"

**உன் வழிகளெல்லாம் உன்னைக் காக்கும்படிக்கு உனக்காக தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார்.**

ஆமென்.